**தலைப்பு – 325 இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு – 325 இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜுன் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு,

தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இலங்கை கடற்படையால் நன்கொடையாக வழங்கப்பட்ட கப்பல் மற்றும் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தால் (UNODC) நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 73,981,670 | இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு கடற்படையினால் வழங்கப்பட்ட கப்பலின் தற்போதைய பெறுமதி அண்ணளவாக ரூபா 29,736,000 மற்றும் UNODC வழங்கிய கப்பலின் மதிப்பு அண்ணளவாக ரூபா 44,245,670 ஆகும்.. | நன்கொடையாக வழங்கப்பட்ட நிதியல்லாத சொத்துகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதியான படகொன்றும் அவுஸ்திரேலிய கடலோர காவல்படையினரால் நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 27,881,944 பெறுமதியான இயந்திரங்கள் நிதியல்லாத சொத்துகளின் கீழ் நிதி கூற்றுக்களில் எடுக்கப்படாததுடன் வெளிப்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அவுஸ்திரேலிய கடலோர காவல்படை நன்கொடையாக வழங்கிய இயந்திரங்களின் மதிப்பு ரூபா 27,881,944 என்பதுடன் அது நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துகளாக சேர்க்கப்பட வேண்டும். | |

**(ஆ) கட்டுநிதி மீதி**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ளபடி மீளாய்வாண்டில் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட ரூபா 22,991,500 தொகை கட்டுநிதி பற்றிய கூற்றில் பணத்தின் மூலம் கட்டுநிதி தீர்க்கப்பட்டதாக காட்டப்படவில்லை. மேலும், திறைசேரியின் பரீட்சை மீதியின்படி செலவுகள் மூலம் கட்டுநிதி தீர்க்கப்பட்ட பெறுமதி ரூபா 318,812,087 ஆக இருந்ததுடன் பணத்தின் மூலம் தீர்க்கப்பட்ட பெறுமதியும் செலவுகள் மூலம் தீர்க்கப்பட்டதாக காட்டப்படமையால் கட்டுநிதி பற்றிய கூற்றில் அப்பெறுமதி ரூபா 341,803,586 ஆக இருந்தது. அதன்படி, அந்த நிலுவைகளுக்கிடையே ரூபா 22,991,500 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | இது நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது ஏற்பட்ட ஒரு தவறு என்று அவதானிக்கப்பட்டதுடன், மேலும் எதிர்கால நிதிக் கூற்றுக்களில் பணம் மற்றும் செலவுகள் மூலம் திறைசேரிக்கு செய்யப்பட்ட கட்டுநிதி தீர்வுகளை தனித்தனியாக காட்டுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | பணம் மற்றும் செலவுகள் மூலம் கட்டுநிதி தீர்வுகள் தனித்தனியாக காட்டப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் மீளாய்வாண்டின் எரிபொருளுக்கான மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு ரூபா 2,400,000 மற்றும் உள்ளபடியான மொத்த செலவு | திணைக்களத்தின் நாளாந்த எரிபொருள் தேவைக்காக வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் போதியளவு | செலவினங்களை முறையாகக் கணித்து, செலவு விடயங்களுக்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 582,759,746 ஆக இருந்தது. அதன்படி, மதிப்பீட்டை விட எரிபொருள் செலவு ரூபா. 580,359,746 அதாவது 24,180 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மதிப்பீடு போதியளவில் இல்லாமையால் மேலதிக எரிபொருள் மீள்நிரப்புப் படாமல் கடற்படையினரிடமிருந்து பெறப்பட்டதால், திணைக்களத்தின் வரவு செலவுத் திட்டம் நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை. | ஒதுக்கீடுகள் செய்யப்படாமையால் கடற்படையிடமிருந்து பெறப்படும் எரிபொருளின் பெறுமதி கடற்படைக்கு மீளளிக்கப்படவில்லை. 2022ஆம் ஆண்டு கடற்படை அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில், நாட்டின் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மீள்நிரப்பப்படாமல் கடற்படையினரால் எரிபொருள் வழங்குவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சகத்தின் பிரதான நிதி அதிகாரியின் கடிதம் மூலம் .இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | தேவையான ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | 2009 இன் 41 இலக்க கடலோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம் | | | |
| | (i) III ஆம் பகுதியின் 11 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ 09 உறுப்பினர் கொண்ட ஆலோசனை சபையொன்று நிறுவப்பட வேணடியிருந்த போதிலும், இதுவரை அந்த சபை நிறுவப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை சபையொன்று நிறுவதற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ உறுப்பினாகளைக் கொண்ட ஆலோசனை சபையொன்று நிறுவப்பட வேண்டும். |
| | (ii) III ஆம் பகுதியின் 12 ஆம் பிரிவு | ஆலோசனை சபையினால் திணைக்களத்தின் வருடாந்த அலுவல்கள் தொடர்பான மீளாய்வொன்று மேற்கொண்டு அமைச்சருக்கு அது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட | அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடிதத்திற்கான பதிலுக்காக காத்திருப்பதால், மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை. | உத்தியோகபூர்வ உறுப்பினாகளைக் கொண்ட ஆலோசனை சபையொன்று நிறுவப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய கொள்கைகள் தொடர்பில் அமைச்சருக்கு சிபாரிசுகளை வழங்குவதற்கும், பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சருக்கு எந்தவொரு விடயத்திலும் ஆலோசனை வழங்குவதற்கும் ஆலோசனை சபை நிறுவப்படாத காரணத்தினால் முடியாதிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ), 4.2.2 (அ) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 04(13) பிரிவு | பெறுகை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் இறுதி சந்தர்ப்பம் வரையான பெறுகை செயல்முறையின் படிநிலைகளை காலரீதியாக விவரிக்கும் ஆவணமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டை உள்ளடக்கிய வகையில் பெறுகை சந்தர்ப்பம் வரையிலான பெறுகை நடவடிக்கைகளின் படிநிலைகளை காலரீதியாக விவரிக்கும் ஆவணமொன்று ரீவுளு) தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் 14 சந்தர்ப்பங்களில் கைப்பற்றப்பட்ட 330 கிராம் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் மற்றும் 1300 மாத்திரைகள் இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட 127 கிராம் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி ரூபா 677,770 ஆக மதிப்பிடப்பட்டபோதிலும், 02 சந்தர்ப்பங்களில் கைப்பற்றப்பட்ட 203 கிராம் தடைசெய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை. | வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் சரியானவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டு சந்தர்ப்பங்களில் உரிய மதிப்பீட்டு பெறுமதிகளை பெறுவதற்கு தவறியதால் அது சமர்ப்பிக்கப்படவில்லை. | தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 283,829,893 ஆன 07 கப்பல்கள் மற்றும் வள்ளங்கள் 03 மாதங்கள் முதல் 3 வருடங்கள் வரையான காலமாக செயலற்ற நிலையில் காணப்பட்டும், ஒதக்கீடுகள் போதியளவில் இல்லாததால், அவற்றை திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாதிருந்தது. | செயலற்ற நிலையில் காணப்படுகின்ற 07 வள்ளங்களை திருத்துவதற்குத் தேவையான உதிரிப்பாகங்கள் கட்டளை இடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் ஒதக்கீடுகள் இல்லாத காரணத்தால் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாதிருந்தது. | வள்ளங்களை பழுதுபார்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அந்த வள்ளங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |